திரு பெ. மலைச்சாமி: தலைவர் அவர்களே, கிராமப்புறங்களில் மக்கள் கோயில்களுக்குச் சென்று மொட்டை அடித்துக்கொள்கிறார்கள். பெண்கள் முடிகள் நல்ல உரமாக இருப்பதால், அதை நிலத்தில் போட்டு உரமாகப் பயன் படுத்தலாம் என்று நிபுணர்கள் சொல்கிறார்கள். இதை அரசு அறியுமா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட முடிகளைக் கொண்டு சவுரிகளாகவும், டோப்பாக்களாகவும் செய்து நல்ல முறையில் விற்பனை செய்கிறார்கள். இந்த முடிகளில் அதிகம் உரம் இருப்பதாகச் சொன்னார்கள். உரம் இருக்கிறது. ஆனால் 1 முதல் 2 சதவீதம் வரைதான் நைட்ரஜன் இருக்கிறது. ஆகவே, இதை உரமாக உபயோகிக்கின்ற எண்ணம் இல்லை.

State Transport buses plying in Mylapore area

* 517 Q.—THIRU S. SANGUMUTHU THEVAR: Will the Hon. the Minister for Transport be pleased to state:

(*a*) whether a number of buses plying in Mylapore area were diverted from their normal routes during the first half of April 1971; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: (அ) ஆம்.

(இ) மயிலாப்பூர், கபாலீஸ்வரர் கோவில் ஆண்டு பிரம்மோத்சவத் திருவிழாவின் போது 1—4—1971 முதல் 10—4—1971 வரையில் 'லஸ்' முதல் மந்தைவெளி அஞ்சல் நிலையம் வரையுள்ள இராமகிருஷ்ணா மடம் சாலையில் பேருந்து போக்குவரத்துக்குக் காவலர்கள் தடை விதித்ததால் பத்தொன்பது வழித்தடப் பேருந்துகளை வேறுவழித் தடங்களில் திருப்பி விட வேண்டிய தாயிற்று. இவ்வாறு வேறு வழித்தடங்களில் பேருந்துகளைத் திருப்பிவிடுவது ஆண்டுதோறும் நடைபெறுகிற ஒரு நிகழ்ச்சியே.

Complaint book in State Transport Buses

* 518 Q.—DR. H. V. HANDE: Will the Hon. the Minister for Transport be pleased to state whether suggestions and complaints books are readily made available for the use of the passengers in all State Express Buses?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: ஆம்.

DR. H. V. HANDE: Sir, is it a fact that complaints have been received that there are no complaint books in some of the buses and if so, what is the action taken by the Government to see that such complaints are not received hereafter?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, ஒவ்வொரு பேருந்துக்கும், நெடுந்தொலைவு பேருந்துக்கும் புகார் புத்தகம் வைக்கப் பட்டுள்ளது. புகார் புத்தகம் வைக்கப்படவில்லையென்கிற எந்தப் புகாரும் வரவில்லை. இந்தப் புகார்களை நானே நேரில் பார்த்து ஆய்வு செய்கிறேன். அதில் நல்ல ஆலோசனைகளைக்கூட எடுத்துச் சொல்கிறார்கள்.

1971 ஜூலை 28]

திரு. நா. வீராசாமி: தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட புகார் புத்தகங்களில் அரசாங்கத்தைப் பாராட்டி ஏதாவது எழுதியிருக்கிறதா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, கடந்த மூன்று வாரமாக வாரத்திற்கு ஒரு பாராட்டு கிடைத்துக்கொண்டிருக்கிறது.

திருமதி த. ந. அனந்தநாயகி: தலைவர் அவர்களே, சாதாரணமாக எழுதப்படுகின்ற புகார்களில் 'அடிக்கடி பஸ்களை தள்ள வேண்டுமென்கிற நிலை' இருக்கிறதென்று புகார்கள் எழுதியிருக்கிறார்களா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, புகார் புத்தகம் என்று நாம் சொல்லும்போது, அதில் புகார்கள் மட்டும் வருவதில்லை. அதில் ஆலோசனைகளையும் சொல்கிறார்கள். பஸ்களை தள்ளுகிற நிலைமை இப்போது ஏற்படவில்லை. கடந்த மூன்று வாரகாலமாக ஒருவர் பாராட்டுகின்ற நிலைமை இருந்து வருகிறது. இந்த வாரம் மட்டும் கிட்டத்தட்ட 12 புகார்களும், 19 ஆலோசனைகளும் வந்திருக்கின்றன. ஆகையினாலே, இது நல்ல முறையில் செயல்படுகிற காரணத்தால், அத்தகைய முறை எதுவும் இல்லை.

திரு. எம். சுரேந்திரன்: சார், இந்தப் புகார் புத்தகங்கள் எவ்வளவு நாட்களுக்கு ஒரு தடவை பரிசீலிக்கப்படுகின்றன? அவ்வாறு பரிசீலிக்கப் பட்டதிலே எவ்வளவு நாட்களுக்கு எவ்வளவு புகார்கள் வந்திருக்கின்றன என்பதைச் சொல்லமுடியுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: ஒவ்வொரு வாரமும் அது பரிசீலிக்கப்படுகிறது. வாரத்திற்கு 19 புகார்கள் என்று ஆரம்பித்து 17 ஆகி, 15 ஆகி 13 ஆகி 8 ஆகியிருக்கிறது. ஆலோசனைகள் என்ற முறையில் ஒன்று என்று ஆரம்பித்து 19 ஆகியிருக்கிறது. புகார்கள் குறைவதும், சஜஸ்ஷன்ஸ், ஆலோசனைகள் அதிகமாகவும் ஆகியிருப்பது வரவேற்கத் தக்கது.

திரு. பெ. மலைச்சாமி: தலைவர் அவர்களே, இந்தப் புகார்ப் புத்தகத்தில் வேண்டுமென்றே சிலர் புகார்கள் எழுதுகிறார்கள் என்று சொல்லப்படுகின்றதே, அதைப்பற்றி அரசுக்குத் தெரியுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: புகார் பண்ணிப் பழக்கப்பட்டவர்களுக்கு அந்தப் பழக்கத்தை மாற்றிக்கொள்ள முடியாது.

திரு. கே. எ. வகாப்: புகார் புத்தகங்கள் வெளியூர் பஸ் நிலையங்களிலும் பயன்படுத்திக் கொள்ளக்கூடிய வகையில் வைக்கப்படுமா? பிராட்வே பஸ் நிலையத்தில் புகார் எடுத்துச்சொல்ல முடியவில்லை, வெளியூர் பஸ்நிலையங்களிலும் புகார் புத்தகங்களை வைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: புகார் புத்தக முறை படிப்படியாக நிறைவேற்றப்பட்டு வருகின்றது. இப்பொழுது முதற்கட்டமாக துரித வண்டிப் பேருந்து நிலையங்களிலே அவை பயன்பட்டுவருகின்றன, அது நல்ல முறையிலே நடக்குமானால், மேலும் மற்ற இடங்களிலும் வைப்பது பற்றி அரசு ஆலோசனைசெய்து முடிவெடுக்கும்.

Dr. H. V. HANDE : The Hon. Minister in his reply said that 12 complaints and 19 suggestions had been received. Suggestions may also contain some complaints with some remedial measures. Out of the 12 complaints what are the major complaints? The most important complaint is that the bus does not reach, in time, several places. What are the details of the complaints? May I also know the remedial measures taken by Government?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : இந்த 12 கம்ப்ளெயின்டில் ஒன்று தான் பிரேக் டவுன் பற்றியது, இன்னொன்று ஆக்ஸிடண்ட்டைப்பற்றி வந்திருக்கிறது. பாடியிலே சத்தம் இருப்பதாக இரண்டும் ஆக மொத்தம் 4 கம்ப்ளெயிண்ட்கள் இருக்கின்றன. மற்றவையெல்லாம் சீட்டுகளில் இடம் சரிவர இல்லாமல் இருப்பதுபற்றியும், கால் வைக்க இடமில்லை என்பது பற்றியும், போகும்பொழுது புகைபிடிப்பதற்கு வசதி செய்யவேண்டுமென்றும் வந்திருக்கிறது.

திரு. நா. கணபதி : இந்தப் புகார் புத்தகத்தைப்பற்றிக் கேள்வி கேட்ட டாக்டர் ஹாண்டே அவர்களுடைய புகார் ஏதாவது புகார் புத்தகத்தில் வந்திருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

Dr. H. V. HANDE : Even now I have got a complaint letter right before me.

Mr. DEPUTY SPEAKER : It is unparliamentary. தனிப்பட்ட உறுப்பினரைப்பற்றி நீங்கள் கேட்கக் கூடாது.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : உறுப்பினர்கள் பதில்சொல்ல முடியாத நிலையிலே இருக்கும்பொழுது உறுப்பினரைக் கேள்வி கேட்பது சரியல்ல.

சென்னை—நாகப்பட்டினம் பேருந்துப்பணி

*519 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

சென்னை—நாகப்பட்டினம் பாதையில் இரவு நேரங்களில் பஸ் விடும் திட்டம் ஏதேனும் தற்போது அரசு பரிசிலனையிலுள்ளதா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, ஆம். சென்னை—நாகப்பட்டினம் வழித்தடம் 538 இல் சென்னையிலிருந்தும் நாகப்பட்டினத்திலிருந்தும் இரவு நேர பேருந்துகள் இரவு ஒன்பதே கால் மணிக்குப் புப்படும். சென்னை—தஞ்சை 558 வழித் தடத்தில் சென்னையிலிருந்தும், தஞ்சையிலிருந்தும் இரவு ஒன்பதேமுக்கால் மணிக்குப் புறப்படும். சென்னையிலிருந்து புறப்படும் வண்டி 7—8—1971-லிருந்தும் நாகை, தஞ்சையிலிருந்து புறப்படும் வண்டி 8—8—1971 இரவு முதலிருந்தும் அமல்படுத்தப் படும். அந்த வண்டிகள் முறையே குறிப்பிட்ட இடங்களுக்கு ஐந்தேமுக்கால் மணிக்கும் 6 மணிக்கும் வந்து சேரும்.